# வடக்குக்கு கப்பல்களில் உணவுப் பொருள் ஏற்றும்

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 19 இதழ் 199
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 4 — 9 — 1993

## வேலைகள் ஸ்தம்பிதம்?

(கொழும்பு)
வடபகுதிக்கு கப்பல் மூலம் உணவுப்பொருட்களை அனுப்பி வைக்கும் வேலைகள் இன்னும் ஆரம்பமாகவில்லையென அத்தியாவசிய சேவைகள் மேலதிக ஆணையாளர் நாயகம் புத்திசிறிவர்த்தன பி. பி. ஸிக்கு நேற்று தெரிவித்தார்.
வடபகுதிக்கு ஏற்கனவே பெருமளவு உணவுப் பொருள்கள் கப்பல்களில் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. (4ம் பக்கம் பார்க்க)

## இலங்கை அகதிகள் வருகை மீண்டும் இடைநிறுத்தம்

(கொழும்பு)
தமிழ் நாட்டிலிருந்து இலங்கை தமிழ் அகதிகளை இலங்கைக்கு மீண்டும் கொண்டுவரும் நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேற்று கொழும்பில் தெரிவித்தனர்.
தமிழ் நாட்டிருந்து நேற்று 400 குடும்பங்கள் திருமலைக்கு கப்பல் மூலம் கொண்டுவரப்பட்டன. இத்துடன் இப்பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அகதிகளை இலங்கைக்கு கொண்டுவரும் பணி மீண்டும் அடுத்தவருடம் ஜனவரி மாதம் ஆரம்பமாகுமென்றும் அந்த அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (வி-வி)

## கடற்படை தளபதியின் அனுமதியின்றி

# வடக்கு கிழக்கு கடற்பரப்பில்

# படகுகள் நடமாடத் தடை!

## நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுல்!!

(கொழும்பு)
வடக்கு- கிழக்கு கடற்பிரதேசத்தில் ஸ்ரீ லங்கா கடற்படைத் தளபதியின் அனுமதியின்றி எந்த விதமான படகுகளும் நடமாட அரசு தடைவிதித்துள்ளது. தடையை மீறும் எந்த ஒரு படகும் ஸ்ரீலங்கா படையினரால் கடலில் மூழ்கடிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் இந்தத் தடை உத்தரவு அமுலுக்கு வந்துள்ளதாக நேற்று அரசு அறிவித்தது.

இந்த தடையுத்தரவு மேற்கு கிழக்கு கரையோரம் அமுல் செய்யப்படும். ...கரையோரத்தில் மன்னார் தீவ் திருகோணமலை வடக்கில் மீன்பிடித்தல் உட்படவேறு பட்டினத்திற்கு வடக்கிலிரு பிராந்தியத்திலும் இத்தடை (4-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் நேற்று 25 தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)
விடுதலைப்புலிகளுக்கு தகவல் கொடுப்போர் என சந்தேகிக்கப்படும் 25 இளைஞர்களை பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
கொழும்பில் வைத்து இந்த 25 இளைஞர்களும் நேற்று கைது செய்யப்பட்டதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
அரசின் சிரேஷ்ட அமைச் (4-ம் பக்கம் பார்க்க)

## மீனவர்களை நோக்கி ஷெல் வீச்சு; ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)
குருநகரில் இருந்து மாலைதீவுக்கு மீன்பிடிக்கச் சென்ற கடற்றொழிலாளரை நோக்கி கல்முனையில் இருந்து இராணுவத்தினர் நடத்திய ஷெல் தாக்குதலினால் மீனவர்களில் ஒருவர் காயமடைந்தார்.
நேற்று மாலை 6-30 மணிக்கு இடம்பெற்ற இச் சம்பவத்தில் இராணுவத்தினர் 10க்கு மேற்பட்ட ஷெல் தாக்குதலை நடத்தினர். (4-ம் பக்கம் பார்க்க)

## புதிய படையினருக்கு நாளை இராணுவப்பயிற்சி ஆரம்பம்

(கொழும்பு)
இராணுவத்தில் புதிதாக சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களுக்கு இராணுவப் பயிற்சிகளை உடன் ஆரம்பிக்க பாதுகாப்பு அமைச்சு முடிவு செய்துள்ளது.
நாளை 5-ந் திகதி முதல் இவர்களுக்கு இராணுவப் பயிற்சி நிலையங்களில் பயிற்சிகள் ஆரம்பமாகும் என இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
இராணுவத்தில் சேர்வதற்காக நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கு சுமார் 20 ஆயிரம் இளைஞர்கள் வந்திருந்தனர். ஆனால் 10 ஆயிரம் பேரை மாத்திரம் சேர்த்துக் கொள்ளவே அரசாங்கம் அனுமதி வழங்கியிருந்தது.
இவர்கள் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் கடமை புரிவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். வடக்கு-கிழக்குப் பகுதியில் இடம்பெற்று வரும் (4-ம் பக்கம் பார்க்க)

## அரசியல் தலைவர்களின் பாதுகாப்பு அதிகரிப்பு!

(கொழும்பு)
கொழும்பில் முக்கிய அரசியல் தலைவர்களின் பாதுகாப்பு மீண்டும் பலப்படுத்தப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.
அரசியல் தலைவர்களுக்கு மேற்கொள்ளவேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து பாதுகாப்பு அமைச்சு அவசரமாகக்கூடி ஆராய்ந்தது. ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா உட்பட பத்துக்கும் மேற்பட்ட அரசியல் தலைவர்களின் பாதுகாப்பே பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
மேற்குறிப்பிடப்பட்ட அரசியல் தலைவர்களின் பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு பாதுகாப்பு அமைச்சு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு விசேட உத்தரவொன்றைப் பிறப்பித்துள்ளது. (வி)

## மருத்துவ வசதிகளின்றி வன்னிமக்கள் பாதிப்பு

(கிளிநொச்சி)
கிளிநொச்சி வைத்தியசாலையில் நீண்டகாலமாக மருத்துவ அதிகாரிகளும், போதிய மருத்துவ வசதிகளும் இல்லாமையால் வன்னிப்பகுதி மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.
கடந்த ஆண்டு கிளாலிப் பகுதியில் நடைபெற்ற படகொலைச்சம்பவத்தில் மேற்படி வைத்தியசாலையில் கடமை (4-ம் பக்கம் பார்க்க)

## கத்திவெட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார்

(யாழ்ப்பாணம்)
மாமனுக்கும் மருமகனுக்கும் இடையில் நீண்டகாலமாக இருந்துவந்த பகைமை காரணமாக இடம்பெற்ற கத்திவெட்டுச் சம்பவத்தில் ஒருவர் பலியானார். மற்றவர் (4-ம் பக்கம் பார்க்க)

## தாயகம் திரும்பிய 369 அகதிக்குடும்பங்கள் வவுனியாவில் உணவின்றி தவிப்பு

(யாழ்ப்பாணம்)
இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பிய வடபகுதி அகதிகள் வவுனியாவில் 24 தினங்களாக உணவு எதுவுமின்றி தவிக்கின்றனர்.
குழந்தைகளின் உடல் நிலை மோசமடைந்துள்ளதுடன் பலவீனமடைந்துள்ளனர்.
அண்மையில் தமிழ்நாட்டிலிருந்து தாயகம் திரும்பிய 369 குடும்பங்கள் வவுனியாவிலுள்ள வேப்பங்குளம், ஆசிகுளம் ஆகிய நலன்புரி நிலையங்களில் (4-ம் பக்கம் பார்க்க)

## அதிகாலை துப்பாக்கிசூடு மக்கள் வெளியேற்றம்

(யாழ்ப்பாணம்)
யாழ். கரையோரப் பகுதியை நோக்கி நேற்று அதிகாலை 12-30 மணிக்கு வேலணை அராலித்துறையில் நிலைகொண்டுள்ள இராணுவம் சரமாரியான துப்பாக்கிவேட்டு (4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

ஒரு இல்லத்தில்
சில உள்ளங்கள்

ஐம்பத்திஐந்து ரூபாவுக்கு ஓர் உணர்ச்சிகரமான சமூக நாவல். பத்திரிகை விற்பனையாளர்களிடம் கேளுங்கள். வியாபாரிகளுக்கு கழிவுண்டு. பூபாலசிங்கம், மக்மிலன், ஸ்ரீகாந் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம். (இ 441)


## புனரமைப்புக் கூட்டம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை (துண்டி) இந்து மயானசபை புனரமைப்புப் பொதுக் கூட்டம் நாளை 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப. 2-00 மணிக்கு கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் அமைப்பாளர் திரு. சி. யோகானந்தம் தலைமையில் நடைபெறும். (154)


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


## ஜனசக்தி உதவி பெறும் குடும்பங்களுக்கு மாதம் 250 ரூபா கிடைக்கும்

(மானிப்பாய்)

ஜனசக்தி உதவி பெறும் குடும்பங்களுக்கு 25 ஆயிரம் ரூபாவுக்கான உறுதிப் பத்திரமும் மாதாந்த வட்டியாக 250 ரூபா பெறுமதியான பாஸ்புத்தகமும் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 6ந் திகதி 22 பிரதேச செயலகங்கள் மூலம் வழங்கப்படவுள்ளன.

இதன் மூலம் கடந்த 27 மாதங்களாக ஜனசக்தி உதவி பெற்று வந்த சுமார் 96 ஆயிரம் குடும்பங்களுக்கு இரண்டாவது கட்ட உதவி இப்போது கிடைக்கின்றது. பாஸ் புத்தகத்தின் மூலம் 250 ரூபா வட்டிப்பணத்தை செப்டம்பர் மாதத்திலிருந்தே பெற்றுக் கொள்ளலாம்.

பாஸ் புத்தகத்தில் கணவன் மனைவி இருவரின் பெயர்களும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. கணவன் இல்லாதபோது மனைவியும், இருவரும் இல்லாதபோது பிள்ளைகளும் இவ்வட்டிப்பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். (71)


யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகப்

பொதுப்
பட்டமளிப்பு விழா
1993-09-11

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொதுப் பட்டமளிப்பு விழா 1993-9-11 ஆந் திகதி மூன்று அமர்வுகளில் நடைபெறும்.

பட்டமளிப்பு விழாவில் நேரடியாகப் பங்கு பற்றும் பட்டதாரிகளுக்கு 1993-09-08 திகதி தொடக்கம் 1993-09-10 ஆம் திகதி வரை காலை 9.30-12-00 மணி வரையும், பிற்பகல் 1.30-3.30 மணிவரைக்கும் பட்டமளிப்பு விழா அங்கிகள் வழங்கப்படும்.

அங்கிகளைப் பெற வரும் பட்டதாரிகள் புதைப்படத்திற்கான ரூபா 30/-ஐ பல்கலைக்கழக இருப்பிடம் செலுத்தி, அதற்குரிய பற்றுச்சீட்டையும், தமது பல்கலைக்கழக அடையாள அட்டையையும் அங்கி கிளையில் சமர்ப்பித்து அங்கிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்
திகதி: 1993-09-02
(எ 3396


## தனிமையில் வாழ்ந்த வயோதிபர் சடலமாக மீட்பு

(நெல்லியடி)

தனிமையில் வாழ்ந்து வந்த பிரம்மச்சாரி ஒருவர், சடலமாக வீட்டிலிருந்து மீட்கப்பட்டார். இச்சம்பவம் நடந்த செவ்வாய்க்கிழமை தம்பசிட்டி புலோலி மேற்கில் இடம் பெற்றது.

இளைப்பாறிய அரச ஊழியரான ஆறுமுகம் பசுபதி (73 வயது) என்னும் பிரம்மச்சாரியே மரணமானவராவார்.

இவரது மரணம் சம்பந்தமான பிரேத பரிசோதனையை பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை மேற்கொண்டார்.

உடுப்பிட்டிப் பகுதி மரண விசாரணை அதிகாரி வி. நடராஜா விசாரணையை நடத்தினார். (160-சி)

## யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட அனுமதி மாணவர்கள் ஏமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு 1993ம் ஆண்டிற்கான மாணவர்கள் அனுமதியில், பாரிய வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. இந்த வகையான அனுமதி மாணவர்களுக்குப் பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

இலங்கைப் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு 1992-93ம் ஆண்டுக்கான மாணவர்கள் அனுமதியில், 67 மாணவர்கள் மட்டும் தகுதி பெற்றிருப்பதாக தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் மாணவர்கள் அனுமதிக்காக வழங்கப்பட்ட கைநூலில், கடந்த வருடங்களில் அனுமதி பெற்றவர்களிலும் பார்க்க, நடப்பு வருடத்துக்குக் கூடுதல் மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் எனத் தெளிவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடங்களில் நடைபெற்ற மருத்துவ பீட அனுமதிகள் வருமாறு:

1988-89ல் 88 மாணவர்களும், 1989-90ல் 93 மருத்துவ மாணவர்களும், 1990-91ல் 108 மாணவர்களும், 1991-92ல் 16 மாணவர்களும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க, 1992-93ம் ஆண்டுக்கான அனுமதியில் மிக மோசமான வீழ்ச்சி ஏற்பட்டிருப்பது, மாணவர்கள் மத்தியில் பலத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. -162-சி

## வெளிவந்துள்ளது

### விநாயகர் திருப்பதிகங்கள்

"மானிப்பாய் மருதடி விநாயகர் திருப்பதிகங்கள்" என்ற நூலை மருதடி விநாயகர் தேவஸ்தானம் வெளியிட்டிருக்கின்றது. வித்துவான் சி. கணேசபண்டிதன் மருதடி விநாயகன் மீது பாடிய காணிக்கைப் பாமாலை, திருப்பள்ளியெழுச்சி, திருவூஞ்சல், தோத்திரப் பாடல், விநாயகர் வெண்பா, பதிகம், திருவிரட்டைமணிமாலை ஆகியன இந்த நூலில் இடம்பெற்றுள்ளன. மானிப்பாயின் பெருமைகள், மருதடியானின் அருட்சிறப்புகள் பாடல்களாக மலர்ந்துள்ளன.

### பவள விழா மலர்

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தின் பவள விழா மலரில் அப்பாடசாலை பற்றிய வரலாறு, பணியாற்றியோர் விபரங்கள் காணப்படுகின்றன. கல்வி, கற்பித்தல், இலக்கியக் கலை ஆகியன பற்றிய பல கட்டுரைகள் அறிஞர்களால் எழுதப்பட்டுள்ளன. ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் அவர்களின் உரும்பராய் பற்றிய ஓர் நோக்கும் மலரை அலங்கரிக்கின்றது.

### அறவழி

அறவழிப் போராட்டக்குழுவின் 'அறவழி' செய்திக்கதிர் சஞ்சிகை ஆகஸ்ட் மாத இதழ் வெளிவந்துள்ளது. இச்சஞ்சிகையில் அறவழி கீதம், இடம் பெயர்ந்தோர் தேவைகளை புறக்கணிக்க முடியாது. தலைவர்கள் அறவழிப்போராட்டக் குழுவின் செய்திகள், இப்படித்தான் வாழ வேண்டும் என்ற அறிவுரை சம்பந்தமான கருத்துக்கள் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன.

### என். ஜி. ஓவின் விளக்க நூல்

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தால் 'அரச சார்பற்ற நிறுவனம் என்றால் என்ன?' என்ற ஒரு புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது.

கனடா நாட்டை தாயகமாகக் கொண்ட திருமதி ஜோன் தோமஸ் என்பவரால் ஆப்கானிஸ்தானில் ஐக்கிய நாடுகள் காரியாலயத்துக்கான இணைச்சபைக்காக தயாரிக்கப்பட்ட ஆங்கிலமொழி மூலம் வெளிவந்த நூல் தமிழ்மொழி பெயர்ப்பே இந்நூலாகும். இந்நூலை எஸ். சிவயோகன் தமிழாக்கியுள்ளார். அரச சார்பற்ற நிறுவனம் எவ்விதம் செயல்பட வேண்டும்? அதன் தலைமைத்துவம் எவ்வாறு அமையவேண்டும்? அதன் சேவைகள் பணிகள் மற்றும் பல விடயங்கள் பற்றி இந்நூலில் விளக்கமாகப் பதிலளிக்கப்பட்டுள்ளது. (ம-இ)


## இசைப் பயிற்சி வகுப்புக்கள்

ஓகன் - ORGAN
கிற்றார் - GUITAR
றம் - DRUM
தபேலா - THABELA

ஆகிய வகுப்புக்கள் சனி, ஞாயிறு நாட்களில் நடைபெறும்.

ஆரம்பம்: 05-09-93

விபரங்களிற்கு:

JAFFNA TECHNICAL INSTITUTE

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(றயில்வே கடவை அருகாமை)
(3389)

## தொழிற் பயிற்சிகள்

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் எலக்ரோனிக் துறையில் தொழில் வாய்ப்பு பெறக்கூடிய முறையில் பயிற்றுவிக்கப்படுகின்றன.

★ றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்

சகல இன றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் தொழிற்படும் முறைகள் பழுதுகள் திருத்தப்படும் முறைகள் செய்முறைப் பயிற்சியுடன் பயிற்றுவிக்கப்படும்.

காலம்: 6 மாதம்

★ றீவைன்டிங்

டைனமோ, ரான்ஸ்போமர், மோட்டர் றீவைன்டிங் செய்தல் பயிற்றுவிக்கப்படும்.

காலம்: 5 மாதம்

★ மோட்டர் சைக்கிள் மெக்கானிசம்

நீர் இறைக்கும் இயந்திரம், மோட்டர் சைக்கிள் திருத்தப்படும் முறைகள் விளக்கமாக பயிற்றுவிக்கப்படும்.

காலம்: 4 மாதம்

பயிற்சிகள் ஆரம்பம்: 06-09-93 (கிழமை நாட்கள்)

விபரங்களிற்கு:

JAFFNA TECHNICAL INSTITUTE

JAFFNA TECHNICAL INSTITUTE SRILANKA JTI

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
(றயில்வே கடவை அருகாமை மேல்மாடி)
(சி-3386)

## மிருதங்க அரங்கேற்றம்

கலைவளம் மிக்க ஈழமண்ணில் இசைமணம் பரப்பும்
செல்வன்
அரியநாயகம் ஸ்ரீகாந்தாவின்
(தினேஷ், விடுதலைப் புலி போராளி)
இன்று (04-09-93) நடைபெறும்
மிருதங்க அரங்கேற்றம் சிறப்புற
வாழ்த்துகிறோம்.

சிங்கம்ஸ் பார்மஸி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(ஏ-3391)

# உள்நாட்டு போர்களினால் மக்களே பாதிக்கப்படுகிறார்கள்

(ஜெனிவா)

உலகில் பல நாடுகளில் நடைபெறும் ஆயுதப் போராட்டங்களினால் இறப்பவர்களில் தொண்ணூறு வீதமானோர் சாதாரண பொதுமக்களாவர். அத்துடன் லட்சக்கணக்கான மக்கள் இதனால் அகதிகளாகின்றனர் என்று ஐ. நா. சபை தெரிவித்துள்ளது.

யுத்தத்தினால் பாதிக்கப்படும் மக்களின் பிரச்சினை தொடர்பாக ஆராய்வதற்கான சர்வதேச மாநாடு ஒன்று அண்மையில் ஜெனிவாவில் நடைபெற்றது. இம்மாநாட்டில் இலங்கை உட்பட நூறு நாடுகள் கலந்து கொண்டன.

உலகில் சில நாடுகளில் நடைபெறும் யுத்தத்தில் எந்த வகையிலும் தொடர்பில்லாத பெரும் தொகையான குடிமக்கள் இறக்கின்றார்கள்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண சர்வதேச நிறுவனங்கள் பல அக்கறையோடு செயற்பட்டுவருகின்றன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக கடந்த பல தசாப்தங்களாக பல்வேறு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டது குறிப்பிடத்தக்கது. (வி)

# நோயின் கொடுமை தாங்காது தற்கொலை

(நெல்லியடி)

நோயின் கொடுமையினால், நஞ்சுக்காய் விதை உட்கொண்ட குடும்பப் பெண் மணி மந்திகை வைத்தியசாலையில் மரணமானார். இச்சம்பவம் கடந்தவாரம் நடைபெற்றது.

கரவெட்டியைச் சேர்ந்த திருமதி கதிரவேல் பத்மாவதி (வயது 48) என்பவரே மரணமானவராவார்.

இதுசம்பந்தமான விசாரணைகளை மேற்கொண்ட உடுப்பிட்டிப்பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு வீ. நடராஜா தற்கொலையெனத் தீர்ப்பளித்தார். (160)

# இந்திய மீனவரின் சடலம் இன்று ஒப்படைக்கப்படும்

(கொழும்பு)

பருத்தித்துறை கடல் பரப்பில் இந்திய மீன்பிடி படகு மீது நேற்று முன் தினம் இலங்கை கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கி சூட்டினால் பலியான இந்திய மீனவரின் சடலம் இன்று இந்திய தூதுவ அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுமென கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி தாக்குதலில் காயமடைந்த மற்ற மூன்று மீனவர்களும் தற்போது கடற்படை வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர்களும் விரைவில் தமிழ்நாட்டுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (வி-ரி)

# மூன்று பொலிசாருக்கு பத்து வருட சிறைத்தண்டனை

(புதுடில்லி)

கல்கத்தாவில் வீதியால் சென்ற இளம்பெண் ஒருவரை பலவந்தமாக மறைவிடம் ஒன்றுக்குக் கொண்டுசென்று கெடுத்த குற்றத்துக்காக மூன்று பொலிசாருக்கு உயர் நீதிமன்றம் பத்து வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்து நேற்று தீர்ப்பளித்தது.

மேற்படி சம்பவம் தொடர்பாக உயர் பொலிஸ் அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுத்ததன் நிமித்தம் இந்த மூன்று பொலிசாரும் கைது செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. —வி

# ஹெலி நோட்டம்

(அரியாலை)

யாழ் நகர கரையோரப் பகுதிகளான பாசையூர், மணியம்தோட்டம், பூம்புகார் பகுதிகளில் நேற்று ஹெலி ஒன்று நோட்டமிட்டுச் சென்றது.

இதேவேளை பூநகரி கடற்கரை முனைக் கடற்பகுதியில் பீரங்கிக் கப்பல்கள் தரித்து நிற்பதால் கடந்த சில தினங்களாக மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (59)

# படையினரால் பலியான அரச ஊழியருக்கு அஞ்சலி

(மானிப்பாய்)

அரச படையினரின் ஆகாயத் தாக்குதலினாலும், ஷெல் தாக்குதலினாலும் கடந்த 27ம், 28ம் திகதிகளில் அகால மரணமடைந்த யாழ். செயலக ஊழியர் விசாகமூர்த்தியும், தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் அலுவலக ஊழியர் எ. நவரத்தினம் ஆகியோருக்கு அஞ்சலிக் கூட்டமொன்று யாழ் செயலகத்தில் யாழ் அரச அதிபர் திரு. மாணிக்கவாசகர் தலைமையில் நேற்றுநடைபெற்றது.

சகல உத்தியோகத்தர்களும் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் யாழ் அரச அதிபர், திட்டப்பணிப் பணிப்பாளர், பிரதம கணக்காளர், பொது சேவைத் தொழிலாளர் சங்க யாழ். கிளைத் தலைவர் ஆகியோர் இரங்கலுரை நிகழ்த்தினர்கள்.

யாழ். மாவட்ட அரச ஊழியர் சங்கம் இத்தாக்குதலைக் கண்டித்து ஜனாதிபதிக்கு எழுதிய மகஜர் ஒன்றும் யாழ். அரச அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. (71-162-வி)

## கிரிக்கெட்

(கொழும்பு)

இலங்கைக்கும் தென்னாபிரிக்காவுக்குமிடையிலான 3-வதும் இறுதியுமான ஒரு நாள் கிரிக்கெட் போட்டி இன்று கொழும்பு கெத்தாராம விளையாட்டரங்கில் பகல் இரவு நேர விளையாட்டாக நடைபெறவுள்ளது. (வி-வி)

## அதிகாலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டுக்களைத் தீர்த்துக்கொண்டிருந்தவேளையில் அராலிக்கடற் பிராந்தியத்தில் கேட்ட படையினரின் மீரங்கிப்படகொன்றின் பேரிரைச்சலைத் தொடர்ந்தும் கொட்டடி, வில்லூன்று கரையோரப் பகுதி மக்கள் மூட்டை முடிச்சுகளுடன் குடும்பம் குடும்பமாக வெளியேறி ஓடினர்.

வெளியேறிய மக்கள் மானிப்பாய் வீதியிலும் பஸ் நிலையப்பகுதிகளிலும் விடியும் வரை காத்திருந்து விடிந்தபின் தம்இடங்களுக்கு திரும்பிச்சென்றனர். (56)

## மருத்துவ

1ம் பக்கத் தொடர்ச்சி)

யாற்றிவந்த வைத்திய அதிகாரியும் பலியானதைத் தொடர்ந்து கிளிநொச்சி வைத்தியசாலையின் வைத்திய சேவைகள் பெரிதும் பாதிக்கப்பட்டது.

தற்போது இவ்வைத்தியசாலையில் போதிய வைத்திய வசதிகள் இல்லாமையால் வன்னிப்பகுதி மக்கள் பலசிரமங்களின் மத்தியில் கிளாலிக் கடல் பாதையால் பயணம் செய்து யாழ்ப்பாணத்துக்கு வரும்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (வி)

## கத்திவெட்டு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காயமடைந்தார்.

புன்னாலைக்கட்டுவனில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் தனது மகளின் கணவரான மருமகனை மாமனார் ஒட்டிநின்று கத்தியால் வெட்டியதாகவும் இதனால் அவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இதனையடுத்து மருமகனை வெட்டியவர் தன்னைத்தானே கத்தியால் வெட்டி தற்கொலை செய்து கொண்டார்.

இச்சம்பவத்தில் புன்னாலைக் கட்டுவன் வடக்கைச் சேர்ந்த கணபதி கதிரன் (வயது 75) என்பவரே மரணமானவராவார்.

மரணமானவரின் மருமகனான கிருஸ்ணன் தங்கராசா (வயது 40 என்பவரே படுகாயமடைந்தவராவார். மரணவிசாரணையின்பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. —56

## தாயகம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு எதுவித நிவாரணமோ, உணவுகளோ வழங்கப்படாமையினால் இவர்களில் பலர் உடல் நலிந்தும் பலர் பலவீனமடைந்த நிலையிலும் இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் மூலம் தெரியவந்துள்ளது.

மேற்படி நலன்புரி முகாமை கண்காணித்து வரும் யு. என். எச். சி. ஆர். அமைப்பின் வவுனியா பகுதிக்கான வெளிக்கள உத்தியோகத்தர் டேவிற் கட்றியான் இது குறித்து கவலை தெரிவித்துள்ளதுடன் பசியால் வாடும் இவ் அகதிகளுக்கு உடனடியாக உணவுப் பொருட்களையோ அல்லது நிவாரணத்திற்கான நிதியையோ அனுப்பிவைக்குமாறு திறை சேரிக்கும் புனர்வாழ்வு அமைச்சுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார். —71-வி

## சிறுவர் மீதான பாலியல்

# வன்முறையை தடுப்பதற்கு பொலிஸார் தீவிர முயற்சி

(கொழும்பு)

நீர்கொழும்பிற்கு வரும் வெளிநாட்டு உல்லாசப்பயணிகளால் சிறுவர்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படுவதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

உல்லாசப் பயணிகள் சிறுவர்களை தகாத முறையில் பயன்படுத்தி வருவதால் சிறுவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படுவதாக கிடைத்த புகாரைத் தொடர்ந்து பொலிசார் இருவரும் உல்லாசப்பயணிகள்மீது கடுமையான கண்காணிப்பை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை நீர்கொழும்பிலுள்ள பெரிய பெரிய ஹோட்டல்களில் விபச்சார தொழில்களில் ஈடுபடுத்துவதற்காக தாய்வானிலிருந்து பல இளம் பெண்கள் வரவழைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிசாருக்கு புகார் செய்யப்பட்டுள்ளது.

சிறுவர்மீதான பாலியல் வன்முறையை நிறுத்தும் முயற்சியில் பல அரச அதிகாரிகளும், தொண்டர் நிறுவனங்களும், பொலிசாரும் தீவிரமுயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இதற்காக விசேட குழுவொன்று அமைக்கப்பட்டு செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. -வி

## கொழும்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சர்கள், எதிர்க்கட்சியை சேர்ந்த சில குறிப்பிட்ட தலைவர்கள் மற்றும் இராணுவத்தைச் சேர்ந்த உயரதிகாரிகள் சம்பந்தமான தகவல்களை சேகரித்து அனுப்புவதில் இவர்கள் ஈடுபட்டிருந்ததாக விசாரணைகளிலிருந்து அறியவந்துள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (இ-ரி)

## மீனவர்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குருநகரைச் சேர்ந்த சவுரிமான் செல்வா வின்சலாஸ் (வயது 33) என்பவரே இத்தாக்குதலில் காயமடைந்தவராவார். யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இச் ஷெல் தாக்குதலினால் பீதியடைந்த ஏனைய மீனவர்களும் தொழிலைக் கைவிட்டு உடனேயே வீடுதிரும்பினர். (56-வி)

## புதிய படையினர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போரில் பலியான படையினரின் சகோதரர்களும் புதிதாக இராணுவத்தில் சேர்ந்துள்ளதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். —இ-ரி

## சடலம் அடையாளம் காணப்பட்டது

(யாழ்ப்பாணம்)

செம்மணிப் பகுதியில் காணப்பட்ட சடலம் சுண்டுக்குழி பழைய பூங்கா வீதியில் வசித்து வந்த கதிரவேலு தெய்வேந்திரம் (வயது 45) என்று நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

பூநகரி ப. நோ. கூ. சங்க முன்னாள் ஊழியரான இவர் தற்போது பழைய பூங்கா வீதியில் புத்தகசாலை ஒன்றை நடாத்திவந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (56 வி-ரி)

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்திவரும் உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியில் இன்று சனிக்கிழமை விளையாடும் கழகங்களின் விபரம் வருமாறு:

இன்றைய முதல் போட்டியில் அரியாலை ஐக்கிய கழகத்தை எதிர்த்து திருமலை நட்சத்திரம் மோதும் 2 வது போட்டியில் பாடும்மீன் கழகத்தை எதிர்த்து யங்ஹீரோஸ் கழகம் மோதும். (வி)

## கடற்படை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எந்தக் காரணத்திற்காகவும் இப்பிரதேசத்தில் பிரயாணத்தை மேற்கொள்ளும் படகுகள் வள்ளங்கள் போன்றவை கடற்படைத்தளபதியின் அனுமதியைப் பெறவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா நேற்று விடுத்துள்ள இந்த உத்தரவு நேற்று முன்தினம் நள்ளிரவிலிருந்து அமுலுக்கு வருகிறது.

புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த தற்கொலைப்படையினர் வடபகுதி கடலில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடும் கடற்படை வள்ளங்கள்மீது தாக்குதல் நடத்தியதினால் இந்தத்தடை உத்தரவுபிறப்பிக்கப்பட்டிருப்பதாகஉத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்களை வடபகுதிக்கு எடுத்துச்செல்லும் கப்பல்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் கூறுகின்றார்கள். (வி)

## யாழ்க்குக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் போதியளவு உணவுப் பொருள்கள் கையிருப்பில் உள்ளன. இப்போதைக்கு அங்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு எந்தவித காரணமும் இல்லை.

தற்போது காங்கேசன் துறையிலும், திருகோணமலையிலும் தரித்து நிற்கும் இரண்டு கப்பல்களும் பருத்தித்துறை செல்வதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இதுவரை அனுமதி வழங்கவில்லை எனவும் தெரியவருகிறது.

இதேவேளை இதுசம்பந்தமாக எதுவித கருத்துக்களையும் தெரிவிக்க கொழும்பிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரி மறுத்து வருவதாகவும் கூறப்படுகிறது

பருத்தித்துறை கடற்பகுதியில் விடுதலைப்புலிகள் ஸ்ரீலங்கா படையினருக்கு எதிராக தாக்குதல்களை மேற்கொள்வார்களேயானால் தற்பாதுகாப்பு நடவடிக்கைகளின் பொருட்டு படையினரும் பதில் தாக்குதல்களை மேற்கொள்ளவேண்டிவரும் என பிரிகேடியர் நளின் அங்கம்மன தெரிவித்ததாக பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது. —இ

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1998ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under licence Number B/10 336/B